DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 11/2020**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜெயச்சந்திரன் | Caste: | |
| Father's Name: | பாண்டி | Calling: | விவசாயம் |
| Village: | திருவரங்கம் தெற்கு குடியிருப்பு | Religion: | |
| Taluk: | முதுகுளத்தூர் | Age: | 37 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 07.08.2025

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் முதுகுளத்தூர் தாலுகா தெற்கு குடியிருப்பு கிராமத்தில் வசித்து வருகிறேன். சாட்சி கவாஸ்வர் என் மாமா மகன். அன்னபூர்ணம் என் அம்மா. சரஸ்வதி என் மனைவி. பாமா என் அக்கா. சாட்சிகள் ரமேஷ், ராஜேந்திரன், பாண்டியராஜ், ரவிக்குமார், சௌந்தரபாண்டி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சாட்சி ஆஜர் எதிரிகளை பார்த்து அவர்களின் பெயர்களை கூறி அடையாளம் காட்டினார். நான் இந்து தேவேந்திர குல வேளாளர் இனத்தை சேர்ந்தவன். 1, 7 எதிரிகளான முத்து சரவணன், ரஞ்சித் யாதவர் இனத்தை சேர்ந்தவர்கள். எதிரி சுரேஷ்கண்ணன் என்ற சுரேஷ் குமார் தேவர் சமூகத்தை சேர்ந்தவர். மற்ற எதிரிகளான மலைச்சாமி, சிலம்பரசன், தமிழரசன், விக்னேஷ்வரன், சந்தானபாண்டி ஆகியோர் தேவேந்திர குல வேளாளர் இனத்தை சேர்ந்தவர்கள். திருவரங்கம் தெற்கு குடியிருப்பில் எங்கள் சமூகத்தை சேர்ந்த 40 குடும்பங்கள் இருந்து வருகிறது. எங்கள் ஊரில் எங்கள்

சமூகத்திலேயே இரண்டு பிரிவுகளாக உள்ளோம். அந்த இரண்டு பிரிவுகளுக்குள்ளும் ஊரில் அடிக்கடி சண்டை வரும். 2017 ம் ஆண்டு எங்கள் தரப்பை சேர்ந்த ரமேஷ்குமார் என்பவரின் மீன்வண்டியை 2 ம் எதிரி மலைச்சாமியும், 4 ம் எதிரி தமிழரசனும் தீ வைத்து எரித்துவிட்டார்கள். அது சம்மந்தமாக கீழதூவல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. 2019 ம் ஆண்டில் எங்கள் தரப்பை சேர்ந்த போதுமகாராஜனை 4 ம் எதிரி தமிழரசனும், 5 ம் எதிரி விக்னேஷ்வரனும் மண்டையை உடைத்து விட்டதால் கீழதூவல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. 2019 ம் ஆண்டில் எனது பெரியம்மா பாண்டியம்மாளின் ஆட்டை 2 ம் எதிரியும், 4 ம் எதிரி தமிழரசனும் தூக்கி கொண்டுபோய் விற்றுவிட்டார்கள். அது சம்மந்தமாக கீழதூவல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. எங்கள் ஊரில் திருட்டுத்தனமாக 1 ம் எதிரி முத்துசரவணன் அவரது கூட்டாளிகளான தமிழரசன், விக்னேஷ்வரன், ரஞ்சித் குமார், சந்தன பாண்டி ஆகியோர்கள் மணல் அள்ளுவார்கள். எங்கள் ஊரில் உள்ள 40 குடும்பங்களும் யாரும் மணல் அள்ளக்கூடாது என பேசி முடிவெடுத்தோம். 2019 ம் ஆண்டு நடந்த உள்ளாட்சி தேர்தலில் என் அம்மா அன்னபூர்ணம் ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட்டார். எதிர் தரப்பில் 2 ம் எதிரி மலைச்சாமியின் அப்பா குமரவேலு அவரது தரப்பில் கோபால் மனைவி ராமஜெயம் என்பவரை நிறுத்தினார்கள். அந்த உள்ளாட்சி தேர்தலில் என் அம்மா வெற்றிபெற்றுவிட்டார். என் அம்மா வெற்றிபெற்ற ஒரு மாதத்திலேயே 1 ம் எதிரி மற்றும் அவரது கூட்டாளிகள் மணல் அள்ளினார்கள். அவ்வாறு மணல் அள்ளி செல்லும்போது கீழத்தூவல் காவல் நிலைய போலிசார்

மணலையும், JCB யையும், லாரியையும் பறிமுதல் செய்து கொண்டு சென்றுவிட்டார்கள். என் அம்மா பஞ்சாயத்து தலைவியான பிறகு என் தம்பி பொன்னிவளவன்தான் என் அம்மாவுடன் இருந்து பஞ்சாயத்து வேலைகளுக்கு உதவியாக பார்த்து வந்தார். என் தம்பி பொன்னிவளவன் போலிசுக்கு தகவல் கொடுத்து தான் மணலையும், JCB யையும், லாரியையும் கைப்பற்றி கொண்டு சென்றுவிட்டார்கள் என்று 1ம் எதிரியும், அவரது கூட்டாளிகளும் கோபமாக இருந்தார்கள். 28.02.2020 ம் தேதி என் மாமா ஆனந்தம் பம்புசெட்டில் என் பெரியம்மா பாண்டியம்மாள் மிளகாய் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது- அந்த மிளகாய் தோட்டம் வீரமாகாளியம்மன் கோவில் அருகே உள்ளது. அந்த கோவிலுக்கு அருகில் பெரியம்மா மிளகாய் தோட்டத்தில் என் மாமா சௌந்தரபாண்டி, அண்ணன் ரவிக்குமார், அண்ணன் பாண்டியராஜ், தம்பி பொன்னிவளவன் ஆகியோர் தண்ணீர் பாய்ச்சிகொண்டு இருந்துள்ளார்கள். என் தம்பி பொன்னிவளவன் போர்வை, டார்ச்லைட் எடுத்துக்கொண்டு சாப்பிட்டுவிட்டு வருவதாக வீட்டிற்கு வந்து, சாப்பிட்டுவிட்டு என் மாமா மகன் கவாஸ்கரை TN 65 AX 8772 பிங்க் மற்றும் கருப்பு கலர் போட்ட வண்டியில் ஏற்றிக்கொண்டு இரவு 9.45 மணியளவில் வீட்டிலிருந்து கிளம்பி சென்றார்கள். இரவு 10.45 மணி இருக்கும்.என் மாப்பிள்ளை கவாஸ்கர் அலறி அடித்துக்கொண்டு என் வீட்டிற்கு ஓடிவந்தான்.அப்போது என் அம்மா அன்னபூரணம், என் மனைவி சரஸ்வரி, என் அக்கா பாமா, என் பெரியப்பா இருளாண்டி ஆகிய அனைவரும் வீட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அலறிஅடித்து ஓடிவந்த கவாஸ்கரை பார்த்து என்ன ஏது என்று நாங்கள் கேட்டபோது என் மாப்பிள்ளை கவாஸ்கர் எங்களிடம் முத்துசரவணன், மலைச்சாமி,

சிலம்பரசன், தமிழரசன், விக்னேஷ்வரன், ரஞ்சித்குமார், சந்தனபாண்டி ஆகியோர் வீரமாகாளியம்மன் கோவில் அருகே வழிமறித்து முத்துசரவணன் நீ இங்கு வருவேன்னு தெரியும்டா தேவுடியா மகனே, என் தொழிலுக்கா இடைஞ்சல் பன்ற என்று முத்துசரவணன் தன் கையில் வைத்திருந்த அருவாளை வைத்து என் தம்பியின் பின்னந்தலையில் 2 வெட்டு வெட்டியுள்ளான். தமிழரசன் வாளை வைத்து என் தம்பியின் நெஞ்சில் வெட்டியதாகவும், மலைச்சாமி அருவாளை வைத்து நெற்றியிலும் இடது குதிகாலிலும் வெட்டியதாகவும், விக்னேஷ்வரன் வாளை வைத்து நெஞ்சில் குத்தியதாகவும், ரஞ்சித்குமார் முத்துசரவணன் வைத்திருந்த அருவாளை வாங்கி வலது தோள்பட்டையிலும், வலது மணிக்கட்டிலும் வெட்டியதாகவும், விக்னேஷ்வரன் வைத்திருந்த வாளை வாங்கி சந்தனபாண்டி நெஞ்சில் குத்தியதாகவும் கவாஸ்கர் சொன்னான். உடனே நான் என் அம்மா, என் மனைவி சரஸ்வதி, அக்கா பாமா, பெரியப்பா இருளாண்டி எல்லோரும் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது என் தம்பி பொன்னிவளவன் வெட்டு காயங்களுடனும் குத்து காயங்களுடனும் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்தான். 29.02.2020 ம் தேதி அதிகாலை 5.00 மணியளவில் நான் கீழத்தூவல் காவல்நிலையத்திற்கு சென்று எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என் தம்பியின் உடலை கைப்பற்றி முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்து எங்களிடம் உடலை ஒப்படைத்தார்கள். நாங்கள் ஈம காரியங்களை முடித்துவிட்டு 4,5 நாட்கள் கழித்து எங்கள் ஊரைச் சேர்ந்த பரத்வாஜ் மற்றும் நிதிஷ்குமார் இருவரும் என் தம்பி போவது வருவதைப்

பார்த்து முத்துசரவணன் மற்றும் அவரது கூட்டாளிகளுக்கு தகவல் சொன்னதாகவும், புளியங்குடியை சேர்ந்த கூத்தபெருமாள் மகன் சுரேஷ்கண்ணன் என்ற சுரேஷ்குமார் அருவாள் வாள் உள்ளிட்ட ஆயுதங்களை சப்ளை செய்ததாகவும் ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்டார்கள். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1**. என் தம்பி சம்பவத்தன்று என்ன கலர் சட்டை மற்றும் ஆடை அணிந்திருந்தார் என்றால் ரோஸ் கலர் முழுக்கை சட்டையும், வெள்ளை கலரில் ஒரு பாசியும், பச்சை கலர் ஜட்டி, கரும்பச்சை சாம்பல் கலர் கட்டம் போட்ட கைலியும் அணிந்திருந்தான். நீதிமன்றத்தில் உள்ள கைலி, சட்டை, ஜட்டி, படிக மாலை மற்றும் எனது தம்பி ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் கண்ணாடி மற்றும் பைக் ஆகியவை என்னிடம் காட்டப்படும் பொருட்கள்தான். அவை முறையே **அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.6**. 17.03.2020ம் தேதி டிஎஸ்பி என்னை நான் கொடுத்த புகார் சம்பந்தமாக விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

s/d. C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 11/2020**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கவாஸ்கர் | Caste: | |
| Father's/Husband Name: | சௌந்தரபாண்டியன் | Calling: | மைக் செட் ஆப்ரேட்டர் |
| Village: | திருவரங்கம் தெற்கு குடியிருப்பு | Religion: | |
| Taluk: | முதுகுளத்தூர் | Age: | 37 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 07.08.2025

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் முதுகுளத்தூர் தாலுகா தெற்கு குடியிருப்பு கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஜெயச்சந்திரன் என் அத்தை மகன். அன்னபூர்ணம் என் அத்தை. சரஸ்வதி என் தங்கை முறை. பாமா என் பெரியம்மா மகள், அக்கா. சாட்சிகள் ரமேஷ், ராஜேந்திரன், பாண்டியராஜ், ரவிக்குமார், ஆகியோர்களை தெரியும். சாட்சி சௌந்தரபாண்டி என் அப்பா. ஆஜர் எதிரிகளை தெரியும். சாட்சி ஆஜர் எதிரிகளை பார்த்து அவர்களின் பெயர்களை கூறி சரியாக அடையாளம் காட்டினார். நான் இந்து தேவேந்திர குல வேளாளர் இனத்தை சேர்ந்தவன். 1, 7 எதிரிகளான முத்து சரவணன், ரஞ்சித் யாதவர் இனத்தை சேர்ந்தவர்கள். எதிரி சுரேஷ்கண்ணன் என்ற சுரேஷ் குமார் தேவர் சமூகத்தை சேர்ந்தவர். மற்ற எதிரிகளான மலைச்சாமி, சிலம்பரசன், தமிழரசன், விக்னேஷ்வரன், சந்தனபாண்டி ஆகியோர் தேவேந்திர குல வேளாளர் இனத்தை சேர்ந்தவர்கள். திருவரங்கம் தெற்கு குடியிருப்பில் எங்கள் சமூசத்தை சேர்ந்த 40

குடும்பங்கள் இருந்து வருகிறது. எங்கள் ஊரில் எங்கள் சமூகத்திலேயே இரண்டு பிரிவுகளாக உள்ளோம். அன்னபூரணம் குரூப் ஒரு பிரிவாகவும், 2ம் எதிரி மலைச்சாமியின் அப்பா குமரவேல் குரூப் ஒரு பிரிவாகவும் உள்ளோம். அந்த இரண்டு பிரிவுகளுக்குள்ளும் ஊரில் அடிக்கடி சண்டை வரும். 2017ம் ஆண்டு எங்கள் தரப்பை சேர்ந்த ரமேஷ்குமார் என்பவரின் மீன்வண்டியை 2ம் எதிரி மலைச்சாமியும், 4ம் எதிரி தமிழரசனும் தீ வைத்து எரித்துவிட்டார்கள். அது சம்மந்தமாக கீழதூவல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. 2019ம் ஆண்டில் எங்கள் தரப்பை சேர்ந்த போதுமகாராஜனை 4ம் எதிரி தமிழரசனும், 5ம் எதிரி விக்னேஷ்வரனும் மண்டையை உடைத்து விட்டதால் கீழதூவல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. 2019ம் ஆண்டில் எனது பெரியம்மா பாண்டியம்மாளின் ஆட்டை 2ம் எதிரியும், 4ம் எதிரி தமிழரசனும் தூக்கி கொண்டுபோய் விற்று தின்றுவிட்டார்கள். அது சம்மந்தமாக கீழதூவல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. எங்கள் ஊரில் திருட்டு தனமாக மணல் அள்ளுவார்கள். அதுசம்பந்தமாக ஊரில் பொதுக்கூட்டம் போட்டு பேசினோம். இதற்கிடையில் உள்ளாட்சி தேர்தல் வந்தது. எங்கள் ஊரில் திருட்டுத்தனமாக 1ம் எதிரி முத்துசரவணன் அவரது கூட்டாளிகளான தமிழரசன், விக்னேஷ்வரன், ரஞ்சித் குமார், சந்தன பாண்டி ஆகியோர்கள் மணல் அள்ளுவார்கள். எங்கள் ஊரில் உள்ள 40 குடும்பங்களும் யாரும் மணல் அள்ளக்கூடாது என பேசி முடிவெடுத்தோம். 2019ம் ஆண்டு நடந்த உள்ளாட்சி தேர்தலில் என் அம்மா அன்னபூர்ணம் ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட்டார். எதிர் தரப்பில் 2ம் எதிரி மலைச்சாமியின் அப்பா

குமரவேலு அவரது தரப்பில் கோபால் மனைவி ராமஜெயம் என்பவரை நிறுத்தினார்கள். அந்த உள்ளாட்சி தேர்தலில் என் அம்மா வெற்றிபெற்றுவிட்டார். என் அத்தை அன்னபூரணத்திற்கு உதவியாக என் மாப்பிள்ளை பொன்னிவளவன்தான் இருந்துவந்தார். என் அம்மா வெற்றிபெற்ற ஒரு மாதத்திலேயே 1ம் எதிரி மற்றும் அவரது கூட்டாளிகள் மணல் அள்ளினார்கள். அவ்வாறு மணல் அள்ளி செல்லும்போது கீழதூவல் காவல்நிலைய போலிசார் மணலையும், JCB யையும், லாரியையும் பறிமுதல் செய்து கொண்டு சென்றுவிட்டார்கள். என் மாப்பிள்ளை பொன்னிவளவன் போலிசுக்கு தகவல் கொடுத்து தான் மணலையும், JCB யையும், லாரியையும் கைப்பற்றி கொண்டு சென்றுவிட்டார்கள் என்று பழிவாங்க வேண்டுமென்று 1ம் எதிரியும், அவரது கூட்டாளிகளும் கோபமாக இருந்தார்கள். 28.02.2019 ம் தேதி என் அப்பா சௌந்தரபாண்டி என் மாப்பிள்ளை பொன்னிவளவன், மற்றொரு மாப்பிள்ளை பாண்டியராஜ், ரவிக்குமார் ஆகியோர்கள் என் சித்தப்பா ஆனந்தம் பம்புசெட்டில் வீரமாகாளியம்மன் கோவில் அருகே உள்ள என் அத்தையின் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்றிருந்தார்கள். அன்று இரவு 9.45 மணியளவில் என் மாப்பிள்ளை பொன்னிவளவன், வீட்டிற்கு சென்று போர்வை மற்றும் டார்ச் லைட்டை எடுத்துகொண்டு சாப்பிட்டுவிட்டு வருவதாக அவர்களிடம் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தார். வீட்டில் சாப்பிட்டுவிட்டு இரவு 10.00 மணியளவில் TN 65 AX 8772 TVS Scooty zest 110–ல் என்னை ஏற்றிக்கொண்டு தண்ணீர் பாய்ச்சும் இடத்திற்கு சென்றார். தண்ணீர் பாய்ச்சும் இடத்திற்கு போகும் வழியில் வீரமாகாளியம்மன் கோவில் அருகில் முத்துசரவணன் அருவாளுடனும், மலைச்சாமி அருவாளுடனும் விக்னேஷ்வரன் வாளுடனும், தமிழரசன்

வாளுடனும், சிலம்பரசன், சந்தனபாண்டி, ரஞ்சித்குமார் ஆகியோர் எங்களை வழிமறித்தனர். வழிமறித்த அவர்களில் முத்துசரவணன் எங்களிடம் நீ இங்குதான் வருவ என எங்களுக்கு தெரியும், எங்கள் தொழிலுக்கு இடைஞ்சலா இருக்கு தேவுடியா மகனே என பேசினார். பேசிக்கொண்டு இருக்கும்போதே முத்துசரவணன் கையில் வைத்திருந்த அருவாளை எடுத்து பொன்னிவளவனின் பின்னந்தலையில் 2 வெட்டு வெட்டினார். நான் பயந்து அருகில் உள்ள கருவத்தூரில் மறைந்துகொண்டு பார்க்கும்போது தமிழரசன் அவர் வைத்திருந்த வாளால் பொன்னிவளவனின் நெஞ்சில் வெட்டினார். மலைச்சாமி தன் கையில் வைத்திருந்த அருவாளால் நெற்றியிலும் குதிகாலிலும் வெட்டினார். விக்னேஷ்வரன் தன் கையில் வைத்திருந்த வாளால் நெஞ்சில் குத்தினார். ரஞ்சித்குமார் முத்துசரவணன் கையில் வைத்திருந்த அருவாளை வாங்கி வலது தோள்பட்டையிலும், வலது மணிக்கட்டிலும் வெட்டினார். சந்தனபாண்டி விக்னேஷ்வரன் வைத்திருந்த வாளை வாங்கி பொன்னிவளவனின் நெஞ்சில் குத்தினார். பக்கத்தில் 3,4 லைட் தெரிந்தவுடன் நான் அலறிஅடித்துக்கொண்டு வீட்டிற்கு ஓடினேன். அங்கு போய் எனது மாப்பிள்ளை ஜெயச்சந்திரனிடம் நடந்த விவரத்தை கூறினேன். நான் கூறும்போது அருகில் அத்தை அன்னபூரணம் தங்கை சரஸ்வதி, அக்கா பாமா, மாமா இருளாண்டி ஆகியோர்கள் இருந்தனர். நான் சொன்னதை கேட்டு அலறி அடித்துக்கொண்டு அவர்கள் சம்பவ இடத்திற்கு ஓடினார்கள். நானும் ஓடினேன். நாங்கள் போய் பார்க்கும் போது என் மாப்பிள்ளை பொன்னிவளவன் வெட்டுகாயங்களுடனும் குத்துக்காயங்களுடனும் இரத்தவெள்ளத்தில் இறந்துகிடந்தார். நாங்கள் அலறி ஓடிய சத்தம் கேட்டு தண்ணீர் பாய்த்து கொண்டிருந்த என் அப்பா

சௌந்தரபாண்டி, பாண்டியராஜ், ரவிக்குமார் ஆகிய மூவரும் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அதிகாலை 5.00 மணியளவில் கீழத்தூவல் காவல்நிலையம் சென்று என் மாப்பிள்ளை ஜெயச்சந்திரன் புகார் கொடுத்தார். புகார் கொடுத்தபிறகு அதிகாலை 6.30 மணியளவில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அன்று காலை 9–9.30 மணியளவில் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன்பிறகு ஈமகாரியங்களை நல்லபடியாக முடித்தோம். அதன்பிறகு 10 நாட்கள் கழித்து எங்கள் ஊரைச் சேர்ந்த பரத்வாஜ், நிதிஷ்குமார் என்பவரும் என் மாப்பிள்ளை பொன்னிவளவன் போவதை வருவதை பார்த்து முத்துசரவணன் குரூப்பிற்கு தகவல் சொன்னதாகவும், புளியங்குடியை சேர்ந்த கூத்தப்பெருமாள் மகன் சுரேஷ்குமார் என்ற சுரேஷ்கண்ணன் அவர்களுக்கு அருவாள் , வாள் போன்றவற்றை கொடுத்ததாகவும் ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்டார்கள். இதுசம்பந்தமாக 29.02.2019 அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தார். அரசு தரப்பு வழக்கறிஞர் வருட்த்தை நினைவுபடுத்தி சொல்லுங்கள் என்று கூறிய பிறகு 2020 என கூறினார். பின்னர் 17.03.2020ம் தேதி டிஎஸ்பி என்னை விசாரித்தார். 23.06.2020ம் தேதி முதுகுளத்தூர் நீதித்துறை நடுவர் முன்னிலையில் நான் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.2** சம்பவ தினத்தன்று பொன்னிவளவன் ரோஸ் கலர் முழுக்கை சட்டையும், சாம்பல் வெள்ளை காப்பி கலர் கட்டம் போட்ட கைலியும், பச்சை கலர் ஜட்டியும், வெள்ளை கலர் படிக மாலையும் அணிந்திருந்தார். நீதிமன்றத்தில் உள்ள சட்டை,கைலி என் மாப்பிள்ளை அணிந்திருந்ததுதான். படிவம் 91ல்

12 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ள அருவாளை கொண்டு முத்துசரவணன் வெட்டினார். அந்த அருவாள் **அ.சா.பொ.7.** படிவம் 91ல் 11 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ள வாளை வைத்து தமிழரசன் வெட்டினார். அந்த வாள் **அ.சா.பொ.8.** படிவம் 91ல் 7 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ள அருவாளை வைத்து மலைச்சாமி வெட்டினார். அந்த அருவாள் **அ.சா.பொ.9**. படிவம் 91ல் 9 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ள குத்துவாளை வைத்து விக்னேஷ்வரன் வெட்டினார். அந்த குத்துவாள் **அ.சா.பொ.10.** முத்துசரவணன் வைத்திருந்த அருவாளை வாங்கி அவரது தம்பி ரஞ்சித்குமார் வெட்டினார். விக்னேஷ்வரன் வைத்திருந்த வாளை வாங்கி சந்தனபாண்டி குத்தினார். நாங்கள் சென்ற பைக்கை அடையாளம் காட்ட முடியும். அந்த பைக் கருப்பு பிங்க் கலர் கொண்டது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம்தான் நாங்கள் சென்ற இருசக்கரவாகனம். இருசக்கர வாகனம் நீதிமன்ற கட்டடத்திற்கு கீழ் தளத்தில் உள்ளது. அதற்குரிய புகைப்படத்தை காட்டிதான் சாட்சியிடம் கேள்வி கேட்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

S/d. C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)